### வங்கதேச பிரபல நடிகைக்கு

# மூளையில் இருந்த 4 செ.மீ. கட்டி நவீன அறுவை சிகிச்சையில் அகற்றம்

## மியாட் மருத்துவமனை சாதனை




மூளையில் இருந்த கட்டிக்காக அறுவை சிகிச்சை செய்த வங்கதேசத்தை சேர்ந்த பிரபல நடிகை பர்வீன் சுல்தானாவுடன் மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நரம்பியல் துறை தலைவர் டாக்டர் பால் டி.ஹென்றி.

சென்னை, ஆக. 22: வங்கதேசத்தின் பிரபலமான நடிகைக்கு, சென்னை மியாட் மருத்துவமனையில் நவீன அறுவை சிகிச்சை மூலம் மூளையில் இருந்த 4 செ.மீ. கட்டியை அகற்றி டாக்டர்கள் சாதனை படைத்துள்ளனர்.

வங்கதேசத்தை சேர்ந்தவர் பர்வீன் சுல்தானா திதி (49). இவர், பிரபல நடிகை. பல்வேறு படங்களில் சிறப்பாக நடித்ததற்காக அந்த நாட்டின் தேசிய விருது பெற்றுள்ளார்.

நடிகை பர்வீன் சுல்தானா, கடந்த சில மாதங்களுக்கு முன் தலைவலியால் அதிக கஷ்டப்பட்டுள்ளார். இதையடுத்து காது, மூக்கு, தொண்டை (இஎன்டி) டாக்டரிடம் சிகிச்சை பெற்றார். அவர்களும், சைனஸ் பிரச்னையாக இருக்கலாம் என்று கூறி மருந்து கொடுத்துள்ளனர். ஆனாலும், தலைவலி சரியாகவில்லை. மேலும் தலைவலியுடன் குமட்டலுடன், சமீபத்திய நிகழ்ச்சிகளை மறந்துவிடும் நிலையும் உண்டானது.

ஒரு கட்டத்தில் குமட்டல் அதிகரிக்க, டாக்டர்கள் எம்ஆர்ஐ ஸ்கேன் செய்து பார்த்தனர். அப்போது, மூளையின் இடது பக்கம் அவருக்கு ஒரு பெரிய கட்டி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. கட்டியை ஆபரேஷன் மூலம் அகற்றினால், உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். அதற்கான நவீன சிகிச்சை முறைகள் வங்கதேசத்தில் இல்லை.

அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள், மூளையில் உள்ள கட்டியை நவீன சிகிச்சை மூலம் அகற்ற, சென்னையில் உள்ள மியாட் மருத்துவமனை அல்லது சிங்கப்பூரில் உள்ள மருத்துவமனைக்கு தான் செல்ல வேண்டும் என்று கூறினர்.

இதையடுத்து நடிகை பர்வீன் சுல்தானா சென்னை மியாட் மருத்துவமனையை தேர்வு செய்து, கடந்த ஜூலை 25ம் தேதி சிகிச்சை பெற வந்தார். மியாட் மருத்துவமனையில் உள்ள நரம்பியல் சிகிச்சை துறை தலைவர் டாக்டர் பால் டி.ஹென்றி பரிசோதனை செய்து, மூளையின் இடது பக்கம் 4 செ.மீ. நீளம் மற்றும் அகலம் இருந்த கட்டியை ஆபரேஷன் மூலம் அகற்ற முடிவு செய்தார். சாதாரணமாக, மூளையில் ஆபரேஷன் செய்யும்போது தலையை மொட்டையடித்துதான் ஆபரேஷன் செய்ய வேண்டும். இவர் நடிகை என்பதால், அவரது குடும்பத்தினர் மொட்டை அடிக்காமல் ஆபரேஷன் செய்யுங்கள் என்று கோரினர்.

இதையடுத்து, தலையில் அதிகளவு முடியை வெட்டாமல் மூளையிலுள்ள கட்டியை அகற்றுவதற்காக நேவிகேஷன் என்ற நவீன சாதனத்தை பயன்படுத்தி தலையில் ஒரு செ.மீ. அளவுக்கு சிறிய துளையிட்டு ஆபரேஷன் செய்து கட்டி வெற்றிகரமாக அகற்றப்பட்டது. தற்போது நடிகை பர்வீனா நலமுடன் உள்ளார்.

இதுகுறித்து நரம்பியல் சிகிச்சை நிபுணர் டாக்டர் பால் ஹென்றி கூறும்போது, "மூளையில் கைகள் செயல்பாடு மற்றும் பேச்சு செயல்பாட்டின் பகுதிக்கு மேல் இருந்த கட்டியை, புதிய நேவிகேஷன் கருவி உதவியுடன் வெற்றிகரமாக அகற்றினோம். இந்த கருவி இல்லாவிட்டால், மூளையின் ஆழமான பகுதிக்குள் அமைந்திருந்த கட்டியை கண்டறிவது மிகவும் சிரமம். இந்த ஆபரேஷன் 6 மணி நேரம் நடந்தது. ஆபரேஷன் செய்த அடுத்த நாளே பர்வீன் சுல்தானா சாதாரண வார்டுக்கு மாற்றப்பட்டார்" என்றார்.